2022 மே 5]

மாவட்டத்தில் ஜீவ சமாதி அடைந்துள்ளார். அந்த ஜீவ சமாதியையும் தனியார் சிறந்த முறையில் நிருவகித்து வருகிறார்கள். கூடுதலாக சித்தர்கள் பற்றி சொல்ல வேண்டுமென்றால், சித்தமெல்லாம் சிவமயம் என்பது ஒருபுறம் என்றாலும், ஜீவ நாடியில் நிறைந்திருப்பவர்கள்தான் சித்தர்கள். அதை முழுமையாக இந்த அரசு, இந்து சமய அறநிலையத் துறை ஏற்றுக்கொண்டதால் இந்த ஆண்டு 3 சித்தர்களுக்கு விழா எடுப்பது குறித்து நேற்றைய மானியக் கோரிக்கையிலே தெரிவித்திருக்கின்றோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் விட்டுச்சென்ற பணிகளை மற்றும் நீங்கள் தொடாத பணிகளையெல்லாம் தொட்டு நிறைவேற்றுகின்ற அரசாக இந்த அரசு இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், சித்தர் வரலாற்றில் இருந்து அகில உலக வரலாற்றையும் வைத்திருக்கிறீர்கள் நன்றி, உங்களுக்கு.*

வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

228—

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம்

***26634—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூரில் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

[2022 மே 5

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூரில் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில் 60 ஆயிரம் லிட்டர் பால் தினசரி கொள்முதல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதற்கு முன்பு தஞ்சை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் வாயிலாக, திருவாரூர் மாவட்டத்திற்காக தனியாக ஒரு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் அமைப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, அதுமாத்திரமல்லாமல், இயந்திரம் மற்றும் கட்டடங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டு, அது இப்போது செயல்படாமல் உள்ளது என்பதையும் இந்த தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த காலங்களில் ஒதுக்கிய அந்த நிதி, தற்போதைய விலைவாசி ஏற்றத்தினால் போதாது என்பதையும் இந்தத் தருணத்தில் பதிவு செய்து, கூடுதல் நிதி ஒதுக்கி, முற்றிலும் விவசாயம் சார்ந்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்டமான திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறும் விதத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகச் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமானது, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் இடமேலையூர், திருவாரூர், மன்னார்குடி, நீடாமங்கலம் ஆகிய இடங்களில் 33 ஆயிரம் லிட்டர் பால் கொள்திறன்கொண்ட நான்கு தொகுப்பு பால் குளிர்விப்பான்கள்* BMC *மூலம் தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு பால்*

2022 மே 5]

அனுப்பப்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 37 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலமாக நாள் ஒன்றிற்கு 49,442 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, 29,618 லிட்டர் பால் தஞ்சாவூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு, எஞ்சிய 19,824 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூன்று தொடக்க பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்மூலம் நாள் ஒன்றிற்கு 350 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு, திருவாரூர் தொகுப்பு, பால் குளிர்விப்பான் BMC மூலம் 100 லிட்டர் பால் தஞ்சாவூர் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டும் எஞ்சிய 250 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனையும் செய்யப்பட்டும் வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட பால் கூட்டுறவு உற்பத்தியாளர் ஒன்றியத்தின் சார்பாக, தஞ்சாவூரில் 48,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் பண்ணை இயங்கிவரும் நிலையில் Dairy Processing and Infrastructure Development Fund (DIDF) திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் 53.55 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு திறன்கொண்ட, புதிய பால் பண்ணை ஒன்று கூடுதலாக நிறுவிட NDDB National Dairy Development Board 42.84 கோடி ரூபாய் கடன் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் ஏற்கெனவே பால் பண்ணை செயல்பட்டு வருவதால், புதிய பால் பண்ணை திருவாரூர் மாவட்டத்தில் நிறுவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் பால் பண்ணை அமைக்க திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் சுமார் 15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து தர கோரப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மாவட்ட நிருவாகத்தால் பால் பண்ணை அமைப்பதற்கான உரிய இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்லி முடித்து விடட்டும்.

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆணைக்கேற்ப மிக விரைவில் அதற்கு அடிக்கல் நாட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள். அடிக்கல் நாட்டப்படும் என்று சொல்விட்டார்; நன்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைத்துத் தருவதற்கு ஒப்புதல் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, கொரடாச்சேரி ஒன்றியத்தில் சுமார் 12,950 கறவை பசுக்கள் உள்ள நிலையில் ஒவ்வொரு நாளும் தினசரி 30,000 லிட்டர் பால் அங்கு உற்பத்தி செய்யப்படுகிறது. அதனால் கொரடாச்சேரி ஒன்றிய அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆய்வு செய்து, ஆய்வுக்குப் பிறகு நிச்சயமாக அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகம். வீட்டுப் பொருளாதாரம் அதனையே நம்பி இருக்கின்றது. ஆனால், தனியார் கொள்முதல் செய்கிற நிலைதான் அதிகம் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் தருமபுரியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் இல்லாத நிலையில் கிருஷ்ணகிரியிலிருந்து தருமபுரி மாவட்டம் பிரிக்கப்பட்டிருக்கிறது. கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்குச் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த இயலாத காரணத்தினால், வருவாய் இல்லாத காரணத்தினால், அரசுத்

2022 மே 5]

துறையின் சார்பில் அந்த நிலத்திற்குண்டான தொகையைச் செலுத்தி, பணிகள் துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் மட்டும் சற்றேறக்குறைய 99,80,000–க்கும் மேற்பட்ட பசுக்களும், ஏறக்குறைய 5,00,000 எருமைகளும் இருக்கின்றன. இதில் ஆவினுக்கு வருகிற பால் மட்டும் ஏறக்குறைய 17,80,000 மாடுகளிலிருந்து நமக்கு வருகிறது. இது மாத்திரமல்லாமல், இப்போது வரக்கூடிய பாலின் வரத்து பனிக் காலத்தில் குறைந்துள்ளது. மற்ற நேரங்களில் அதிகரிக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கொரோனா காலத்தில் நமக்கு அதிக அளவு பால் வரத்து வந்தது. அதே சமயத்தில் தற்போது அது குறைந்து வருகிறது. சூழ்நிலைக்கேற்றவாறு ஏற்றத்தாழ்வுகள் வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்கு மட்டும் சுருக்கமாக பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நம்முடைய தருமபுரி மாவட்டத்தில் பால் வரத்து மிகவும் குறைவு. கிருஷ்ணகிரியிலிருந்து தருமபுரியைப் பிரித்தாலும்கூட தருமபுரியில் பால் வரத்து மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், கிருஷ்ணகிரியிலும் சங்கங்கள் நஷ்டத்தில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, தருமபுரி மாவட்டத்தில் மிக விரைவில் அதனை ஆய்வு செய்து அங்கு ஒரு புதிய கட்டடத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஒரு விவசாயிதான். அங்கிருக்கின்ற செயலிழந்த சங்கங்கள் உயிர்பெற்று வருகின்ற அளவிற்கு அவர் உறுதுணையாக இருக்க வேண்டும். ஏறக்குறைய 9,200–க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருந்தாலும், கடந்த காலங்களில் 2,500 சங்கங்கள் செயலிழந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்களும் ஒரு விவசாயிதான். அவற்றையெல்லாம் மெருகேற்றும் வகையில் அவற்றிற்கு புத்துயிர் அளித்து ஊக்கப்படுத்துவாரேயானால், அங்கே பால் வரத்து*

அதிகரிக்கும்பட்சத்தில் நிச்சயமாக அவர் விருப்பத்திற்கிணங்க, அந்தப் பணி நிறைவு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து அவர்கள். கேள்வியும் சுருக்கமாக இருக்க வேண்டும்; பதிலும் சுருக்கமாக இருக்க வேண்டும்.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய திருத்துறைப்பூண்டி தொகுதியில், குறிப்பாக, கோட்டூர், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் வளர்க்கிற கால்நடைகளிலிருந்து கிடைக்கின்ற பால் உற்பத்தியை தனியார்தான் கொள்முதல் செய்கிறார்கள். அந்தத் தொகுதியில் பால் கொள்முதல் நிலையம் கிடையாது; பால் உற்பத்தியாளர்கள் சங்கம் கிடையாது. எனவே, பால் கொள்முதல் நிலையங்களைக் கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வியில் பால் உற்பத்தியாளர்கள் சங்கமும் இல்லை; பால் கொள்முதல் நிலையமும் இல்லை. உற்பத்தியாளர்கள் இல்லையென்றால் பால் கொள்முதல் நிலையம் எப்படி ஆரம்பிப்பார்கள்? மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அங்கே பால் உற்பத்தியாளர்கள் கிடையாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தேவையிருப்பின் அமைத்துத் தரப்படும்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதுபோன்று 2,000–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன; உயிரூட்டும் நிலையில் இருக்கின்றன. அவற்றையெல்லாம் உருவாக்குவதற்கு தாங்கள் முயற்சி எடுக்க வேண்டும். நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம். ஆக, வருகின்ற*

2022 மே 5]

காலங்களில் செயலிழந்த அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பதிலாக புதிதாக உருவாக்குவதற்கு மிக விரைவில் தாங்களும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தாங்களும் ஒரு விவசாயிதான் என்பது எனக்குத் தெரியும். அந்த வகையில் உயிரூட்டும்பட்சத்தில் கொள்முதலையும், அதேநேரத்தில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உங்களோடு இணைந்து நாங்களும் உறுதுணையாக இருப்போம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக கால்நடை தீவனம் தயாரிக்கின்ற தொழிற்சாலை அங்கே இருக்கின்றது. முந்தைய ஆட்சிக் காலத்தில் ஒரு கிலோவுக்கு 4 ரூபாய், இரண்டாவதாக 2 ரூபாய் தீவனத்திற்கு மானியம் என இறுதியாக வழங்கப்பட்டன. இப்போது அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கால்நடை தீவனம் என்று சொன்னால், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதிலளிப்பார்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அவருடைய கட்டுப்பாட்டில் இல்லை; Dairy control–ல் இருக்கிறது. ஆகவே, இதுவரையிலும் 10 கோடியே 65 இலட்சம் ரூபாய் அதற்கு மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதனை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–15

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கால்நடைத் தீவனங்கள் உற்பத்தி

செய்கிறபோது, தனியார் நிறுவனங்கள் வியாபார நோக்கோடு பலவிதமான கலப்படங்களுடன் உற்பத்தி செய்கின்றன. அரசைப் பொறுத்தவரையில், கால்நடைத் துறையின் நெறிகாட்டுதலின்படி, எந்தவிதமான கலப்படமும் இல்லாமல் தீவனங்களை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். இலாப நோக்கம் இல்லாமல் அவர்களுக்கு மானிய விலையில் வழங்கி வருகிறோம். எந்தெந்த Unions நஷ்டத்தில் இயங்குகின்றனவோ, அவற்றிற்கு விற்பனை விலையில் சுமார் ரூ.7/–ம், அதேபோன்று, சற்று இலாபம் குறைவாக இருக்கும் union–க்கு ரூ.2/–ம் மானியம் கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். ஆகவே, தற்போது ஆண்டொன்றுக்கு ரூ.770 கோடி நட்டத்தில் இயங்குகிற இந்த இக்கட்டான சூழ்நிலையிலும், அதைப் பொருட்படுத்தாமல் வியாபார நோக்கில்லாமல் விவசாயிகள் நலன் பெறவேண்டுமென்றும், உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்திலும், கால்நடைகளுக்குச் சரியான முறையில் தீவனங்கள் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடும்தான் இதனை நாம் செய்துகொண்டு வருகிறோம். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, வழங்கப்படும் மானியத்தை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

விளையாட்டுத் திடல்

***12064—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திம்மாவரம் ஊராட்சியில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?